**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.35/2023
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ஜெயராணி | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of October 2023.

20.10.2023

(1ம் எதிரி ஆஜர், 2 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை செய்கிறேன். கடந்த 26.04.2022ம் தேதி எனது அம்மா, அப்பாவை பார்ப்பதற்காக சென்னையிலிருந்து நான் வந்திருந்தேன். அன்றைய தினம் மதியம் 03.15 மணியளவில் வீடு கட்டுவது தொடர்பாக நான் ஆஜர் 1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி மதி, 3ம் எதிரி கணேசன் ஆகியோரிடம் எனக்கு வழி விடுங்கள் என்று கேட்டேன். உடனே அதற்கு ஆஜர் 1ம் எதிரி சக்திவேல் தேவிடியா உனது சப்பையை கிழித்துவிடுவேன் எல்லாத்திற்கும் நீ தான் காரணம் என்று அசிங்கமாக பேசினார்.

2) பின்பு எனது அம்மா சண்முகத்தை பார்த்து உன்னை 3 நாட்கள் கெடுத்துவிட்டது உனக்கு தெரியவில்லையா என்று அசிங்கமாக பேசினார். மூங்கில் கம்பை வைத்து எனது தலையில் ஆஜர் 1ம் எதிரி சக்திவேல் அடித்தார். நாங்கள் கட்டியிருந்த வீட்டை 3 எதிரிகளும் சேர்ந்து இடித்தார்கள். எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் நான் மயக்கமாகிவிட்டேன். பின்பு முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கூறகூற புகார் மனுவை போலிசார் எழுதிக்கொண்டு என்னிடம்

படித்துக்காட்டி கையொப்பம் வாங்கினார்கள். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது அம்மா என்னை சிகிச்சைக்கு அழைத்து சென்று சேர்த்தார். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பினார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.